# பொதுக்காலம் 29ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

அன்புமிக்கவர்களே! இறை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். “தொண்டு ஏற்பது எளிது; ஆனால் தொண்டு ஆற்றுவது அத்தனை சுலபமல்ல.” இயேசு தொண்டு ஆற்றுவதையே மிகவும் விரும்பி அனைவருக்கும் முன்மாதிரியான வாழ்வு வாழ்ந்தார். தனக்குக் கொடுக்கப்பட்டப் பணியைச் சிறப்புடன் செய்வதே மிகுந்த கனி கொடுக்கும் செயலாகும் என்பதை முன்னிருத்தினார்.

“பதவி என்பது பணி செய்வதற்கே” என்கின்றார் நம் திருத்தந்தை பிரான்சிஸ். இன்றைய நற்செய்தி பதவி மோகத்தைப் பற்றி எடுத்துரைக்கிறது. இயேசு தம் சீடர்களிடம் தான் ஒரு தீபமாக சிலுவை மரத்தில் ஒளிரப் போவதைப் பற்றிக் கூறுகிறார். தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும், பேய்களை ஓட்ட அதிகாரம் கொண்டிருக்கவும் நியமிக்கப்பட்டத் திருத்தூதர்கள் உலக அதிகாரத்திற்காக திசை மாறுவதை உணர்ந்த இயேசு, உங்களுள் முதன்மையாக இருக்க விரும்புகிறவர் அனைவருக்கும் பணியாளராய் இருக்கட்டும் என்கின்றார்.

இறைவாக்கினர் எசாயா ஆண்டவரின் துன்புறும் ஊழியரைப் பற்றி எடுத்துரைக்கிறார். இந்த வார்த்தைகளைக் கொண்டே இயேசு தம் சீடர்களின் தவறான எண்ணங்களை மாற்றினார். பணிவிடை புரிவது என்பது மற்றவர்களின் சுமைகளைப் பகிர்ந்து கொள்வதிலும் ஆறுதலாக தோள் கொடுப்பதிலுமே அடங்கியுள்ளது. தந்தையால் கொடுக்கப்பட்டப் பணியை இயேசு விரும்பி செய்தார். இறையாட்சிப் பணிக்காக நாம் ஏற்றுக் கொண்ட பணிகளை பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்காமல் பிரமாணிக்கத்தோடு செய்திட வரம் வேண்டி பலியில் இணைவோம்.

## முதல் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! எசாயா இறைவாக்கினர் இயேசுவை துன்புறும் ஊழியராக நமக்கு முன்னறிவிக்கின்றார். அவர் சிறுமைப் பட்டாலும் வாயை திறவாதிருந்தார். என்று இயேசுவின் பாடுகளைப் பற்றி குறிப்பிடும் எசாயா இறைவாக்கினர் நூலின் வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! நம்முடைய தலைமைக் குரு நமது வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட்டத் தயங்குபவர் அல்ல. நாம் அவரது இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக்கூடிய வரம் பெறவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்லும் உயர்ந்த எண்ணத்தோடு எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் வார்த்தைகளுக்கு கவனமாய் செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அருள்மழை பொழிபவரே எம் இறைவா! திரு அவையின் பணியாளர்களான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் இவர்களின் நற்செய்திப் பணியிலும், சமூகப் பணியிலும் நாங்களும் உடனிருந்து அவர்களது பணிக்கு எங்களது பங்களிப்பினை நல்கும் நல் உள்ளம் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்கள் அடைக்கலப் பாறையான இறைவா! நாங்கள் எங்களது வாழ்வில் பிறர் துதி பாடும் செயலினை மறந்து உம் கரம் பிடித்து வழிநடந்து உம்பில் நிலைத்திருக்கும் வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தொண்டு செய்து வாழ்ந்திட எங்களை அழைப்பவரே எம் இறைவா! நாங்கள் துன்பத்தில் உழலும் மக்களை இனம் கண்டு, அவர்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளை செய்து வாழ்ந்திடும் நல்மனம் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. வரங்களின் வள்ளலே எம் இறைவா! நாங்கள் பிறரைக் குற்ற நோக்குடன் கண்ணோக்கி குறை கூறுபவர்களாகவும், தீர்ப்பிடுபவர்களாகவும் வாழ்ந்திடாமல் பிறரிடம் உள்ள நற்செயல்களை ஏற்றுக்கொண்டு அன்புள்ளத்துடன் வாழ்ந்திட வரம்தர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

**நன்றி : ஆசிரியை திருமதி. ஞா.சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com